# தினத்தந்தி (17.06.2021)

தேசிய அளவில் சிறந்த சமுதாய பொறுப்புணர்வு செயல்பாட்டிற்காக

## தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்திற்கு 'தங்கமயில்' விருது

கரூர், ஜூன்.17-

இண்டியூசன்ஸ் ஆப் டிரைக்டர்ஸ் புதுடெல்லி என்ற அமைப்பானது ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மை, எண்ணெய் உற்பத்தி, பொறியியல், புதுப்பிக்கக்கூடிய சக்தி உற்பத்தி, வங்கித்துறை, சிமெண்டு, காகித உற்பத்தி, சுரங்கம் மற்றும் உலோகம் போன்ற நிறுவனங்களில் சமுதாய பொறுப்புணர்வு திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும் நிறுவனத்தை உலக அளவிலும், தேசிய அளவிலும் தேர்வு செய்து 'தங்கமயில்' விருதினை வழங்கி வருகிறது. அந்த வகையில் 2020-ம் ஆண்டிற்கான சமுதாய பொறுப்புணர்விற்காக வழங்கப்படும் தங்கமயில் விருதிற்கு கரூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் உள்பட 319 நிறுவனங்கள் போட்டியிட்டன. இதில் தேசிய அளவில் சிறந்த சமுதாய பொறுப்புணர்வு செயல்பாட்டிற்காக கரூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் தேர்வு செய்யப்பட்டது. டெல்லியில் காணொலிக்காட்சி மூலம் நடைபெற்ற 'தங்கமயில்' விருது வழங்கும் விழாவில் காகித ஆலைநிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் ராஜீவ்ரஞ்சன் கலந்து கொண்டு, காகித ஆலை நிறுவனம் செயல்படுத்தி வரும் நலப்பணித்திட்டங்கள் பற்றியும், கொரோனா தடுப்பு பணிகளின் பங்களிப்பு பற்றியும் உரையாற்றி விருதினை பெற்று கொண்டார்.



## தினகரன் (16.06.2021)

சமுதாய பொறுப்புணர்வு செயல்பாடு

# கரூர் காகித ஆலைக்கு தங்க மயில் விருது

க.பரமத்தி, ஜூன் 16: கரூர் காகித ஆலைக்கு சமுதாய பொறுப்புணர்வு செயல் பாட்டிற்காக தங்கமயில் விருது வழங்கப்பட்டுள்ளது.



கரூர் காகித ஆலைக்கு சமுதாய பொறுப்புணர்வு செயல்பாட்டுக்காக தங்க மயில் விருது வழங்கப்பட்டுள்ளது.

கரூர் டிஎன்பிஎல் காகித ஆலை சுற்றியுள்ள கிராமங்களைச் சார்ந்த நலிவுற்ற சமுதாய குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வழங்குதல், அரசுப் பள்ளிகளில் மாணாக்கர்களுக்கு ஆங்கிலம் பேச்சுத்திறன் பயிற்சி அளித்தல், பொதுத்தேர்வு எழுதும் மாணாக்கர்களுக்கென நடத்தப்படும் மாலை நேர சிறப்பு வகுப்புகளில் தேநீர்,பிஸ்கட் வழங்குதல், இலவச மருத்துவ முகாம்கள், கண் மருத்துவ முகாம்கள் நடத்தி தேவையான உதவிகள் வழங்குதல், அரசு மருத்துவமனைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குதல், திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல் போன்ற எண்ணற்ற சமுதாய நலப்பணித்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. 2020ம் ஆண்டிற்கான சமுதாய பொறுப்புணர்விற்காக வழங்கப்படும் தங்கமயில் விருதிற்கு 319நிறுவனங்கள் போட்டியிட்டதில் தேசிய அளவில் சிறந்த சமுதாய பொறுப்புணர்வு செயல்பாட்டிற்காக கரூர் டிஎன்பிஎல் தேர்வு செய்யப்பட்டது. கடந்த 10ம் தேதி காணொலி காட்சி மூலம் நடைபெற்ற தங்கமயில் விருது வழங்கும் விழாவில் காகித ஆலை நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜீவ்ரஞ்சன் கலந்து கொண்டு காகித நிறுவனம் செயல்படுத்தி வரும் நலப்பணித்திட்டங்கள் பற்றியும், கொரோனா தடுப்பு பணிகளின் பங்களிப்பு பற்றியும் உரையாற்றி விருதினையும், சான்றிதழையும் பெற்றுக்கொண்டார்.

# இந்து தமிழ் திசை (13.06.2021)

சமுதாய பொறுப்புணர்வு செயல்பாட்டுக்காக

## டிஎன்பிஎல் நிறுவனத்துக்கு தங்கமயில் விருது

கரூர்

சமுதாய பொறுப்புணர்வு செயல்பாட்டுக்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்துக்கு (டிஎன்பிஎல்) தங்க மயில் விருது வழங்கப்பட்டுள்ளது.

புதுடெல்லி இன்ஸ்டியூட் ஆப் டைரக்டர்ஸ் என்ற அமைப்பானது ஒவ்வொரு ஆண்டும் பொறியியல், புதுப்பிக்கக்கூடிய சக்தி உற்பத்தி, வங்கித்துறை, சிமென்ட், காகித உற்பத்தி உள்ளிட்ட நிறுவனங்களில் சமுதாய பொறுப்புணர்வு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் நிறுவனத்தை உலக அளவிலும், தேசிய அளவிலும் தேர்வு செய்து தங்கமயில் விருதை வழங்கி வருகிறது. அதன்படி, கரூர் புகழூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், அதைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சார்ந்த நலிவுற்ற சமுதாய குழந்தைகளுக்கு இலவசக் கல்வி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில பேச்சுப் பயிற்சி, இலவச மருத்துவ முகாம்கள், கண் மருத்துவ முகாம்கள் நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு நலப்பணித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.



▲ தங்கமயில் விருதுடன் டிஎன்பிஎல் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜீவ் ரஞ்சன்.

இதையடுத்து, 2020-ம் ஆண்டுக்கான சமுதாய பொறுப்புணர்வு செயல்பாட்டுக்காக வழங்கப்படும் தங்கமயில் விருதுக்கு 319 நிறுவனங்கள் போட்டியிட்டதில், சிறந்த செயல்பாட்டுக்காக தேசிய அளவில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தேர்வு செய்யப்பட்டது. காணொலி காட்சி மூலம் ஜூன் 10-ம் தேதி நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜீவ் ரஞ்சன் பங்கேற்று காகித நிறுவனம் செயல்படுத்தி வரும் நலப்பணித்திட்டங்கள் பற்றியும், கரோனா தடுப்பு பணிகளின் பங்களிப்பு பற்றியும் உரையாற்றி விருதைப் பெற்றுக் கொண்டார்.

## தினமணி (13.06.2021)

# சமூக செயல்பாட்டுக்காக டிஎன்பிஎல் ஆலைக்கு தங்கமயில் விருது

கரூர், ஜூன் 12: கரூர் மாவட்டம் புகழூர் டிஎன்பிஎல் ஆலைக்கு தங்க மயில் விருது கிடைத்துள்ளது.



தங்கமயில் விருதுடன் டிஎன்பிஎல் ஆலையின் மேலாண்மை இயக்குநர் ராஜீவ்ரஞ்சன்.

இன்ஸ்டிட்யூட் ஆஃப் டைரக்டர்ஸ் நியூ தில்லி என்ற அமைப்பானது ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மை, எண்ணெய் உற்பத்தி, பொறியியல், புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி உற்பத்தி, வங்கித்துறை, சிமெண்ட், காகித உற்பத்தி, சுரங்கம் மற்றும் உலோகம் போன்ற நிறுவனங்களில் சமுதாய பொறுப்புணர்வு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் நிறுவனத்தை உலக அளவிலும், தேசிய அளவிலும் தேர்வு செய்து தங்கமயில் விருதை வழங்கி வருகிறது.

இந்நிலையில், கரூர் மாவட்டம் புகழூர் டிஎன்பிஎல் ஆலையானது, ஆலையை சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த நலிவுற்ற சமுதாய குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வழங்குதல், அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்கு ஆங்கிலம் பேச்சுத்திறன் பயிற்சி அளித்தல், இலவச மருத்துவ முகாம்கள், கண் மருத்துவ முகாம்கள் நடத்தி தேவையான உதவிகள் வழங்குதல், அரசு மருத்துவமனைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குதல், திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல், கிராம மக்களுக்கு குடிநீர் வழங்குதல், ஏரி குளங்கள், கால்வாய்கள் தூர் வாருதல், மரக்கன்றுகள் வழங்குதல், நடுதல் போன்ற எண்ணற்ற சமுதாய நலப்பணித்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

2020–ஆம் ஆண்டுக்கான சமுதாய பொறுப்புணர்வுக்காக வழங்கப்படும் தங்கமயில் விருதுக்கு தேசிய அளவில் புகழூர் காகித (டிஎன்பிஎல்) ஆலை தேர்வு செய்யப்பட்டது. இதையடுத்து காணொலி காட்சி மூலம் வியாழக்கிழமை நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், ஆலை சார்பில் மேலாண்மை இயக்குநர் முனைவர் ராஜீவ்ரஞ்சன் விருதை பெற்றுக் கொண்டார்.

காலைக்கதிர் (13.06.2021)


# டி.என்.பி.எல்., நிறுவனத்துக்கு தங்கமயில் விருது

கரூர், ஜூன் 13-

கரூர் டி.என்.பி.எல்., நிறுவனத்திற்கு தங்க மயில் விருது கிடைத்துள்ளது.

இன்ஸ்டிட்யூட் ஆப் டைரக்டர்ஸ், நியு டில்லி என்ற அமைப்பானது ஒவ்வொரு ஆண்டும் வேளாண், எண்ணெய் உற்பத்தி, பொறியியல், புதுப்பிக்கக்கூடிய சக்தி உற்பத்தி, வங்கித்துறை, சிமெண்ட், காகித உற்பத்தி, சுரங்கம் மற்றும் உலோகம் போன்ற தொழிற்சாலைகளில், சமுதாய பொறுப்புணர்வு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் நிறுவனத்தை உலக அளவிலும், தேசிய அளவிலும் தேர்வு செய்து தங்கமயில் விருதை வழங்கி வருகிறது. இதில், 2020ம் ஆண்டுக்குரிய தங்கமயில் விருது கரூர் டி.என்.பி.எல்., நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. இந்த விருதை, காணொலி காட்சி மூலம் நிறுவன மேலாண் இயக்குனர் ராஜீவ் ரஞ்சன் பெற்றுக்கொண்டார்.

தினமலர் (12.06.2021)



புதுடில்லி இன்ஸ்டிடியூட் ஆப் டைரக்டர்ஸ் அமைப்பு சார்பில் தமிழ்நாடு செய்தித்தாள் காகிதஆலைக்கு வழங்கப்பட்ட தங்கமயில் விருதுடன் மேலாண்மை இயக்குனர் ராஜிவ்ரஞ்சன்.

# காகித ஆலைக்கு 'தங்கமயில்' விருது

வேலாயுதம்பாளையம், ஜூன் 12–

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலைக்கு சமுதாய பொறுப்புணர்வு செயல்பாட்டிற்காக தங்கமயில் விருது வழங்கப்பட்டுள்ளது.

புதுடில்லி இன்ஸ்டிடியூட் ஆப் டைரக்டர்ஸ் என்ற அமைப்பு உலக அளவிலும் தேசிய அளவிலும் சிறந்த நிறுவனங்களை தேர்வு செய்து தங்கமயில் விருதினை வழங்கி வருகிறது. தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலையானது சுற்றியுள்ள கிராமங்களில் நலிவுற்ற குழந்தைகளுக்கு இலவச கல்வி வழங்குதல், அரசு பள்ளிகளில் மாணவர்களுக்கு ஆங்கிலம் பேச்சுத்திறன் பயிற்சி அளித்தல், பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு நடத்தும் மாலை நேர சிறப்பு வகுப்பில் தேநீர், பிஸ்கட் வழங்குதல், கண் மருத்துவ முகாம்களை நடத்தி தேவையான உதவிகள் வழங்குதல் என்று பல சமுதாய நலத்திட்டங்களை செய்து வருகிறது.

அதன் காரணமாக 2020ம் ஆண்டிற்கான தங்கமயில் விருதிற்கு 319 நிறுவனங்கள் போட்டியிட்டதில் தேசிய அளவில் சிறந்த சமுதாய செயல்பாட்டிற்காக தமிழ்நாடு காகிதஆலை தேர்வு செய்யப்பட்டது. காணொலி காட்சி மூலம் நடந்த விருது வழங்கும் விழாவில் காகிதஆலை சார்பில் அதன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் ராஜிவ் ரஞ்சன் தங்கமயில் விருதினை பெற்றுகொண்டார்.

## மாலை மலர் 12.06.2021

...படுத்தி உள்ளது.

# தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்துக்கு விருது

பரமத்திவேலூர், ஜூன்.12-

டெல்லியை சேர்ந்த இன்ஸ்டிடியூட் ஆப் டைரக்டர்ஸ் என்ற அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் மேலாண்மை, எண்ணை உற்பத்தி, பொறியியல், புதுப்பிக்கக்கூடிய சக்தி உற்பத்தி, வங்கித்துறை, சிமெண்ட், காகித உற்பத்தி, சுரங்கம் மற்றும் உலோகம் போன்ற நிறுவனங்களில் சமுதாய பொறுப்புணர்வு திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும் நிறுவனத்தை உலக அளவிலும், தேசிய அளவிலும் தேர்வு செய்து தங்கமயில் விருதினை வழங்கி வருகின்றது. 2020-ம் ஆண்டிற்கான சமுதாய பொறுப்புணர்விற்காக வழங்கப்படும் தங்க மயில் விருதிற்கு 319 நிறுவனங்கள் போட்டியிட்டன. இதில் தேசிய அளவில் சிறந்த சமுதாய பொறுப்புணர்வு செயல்பாட்டிற்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தேர்வு செய்யப்பட்டது.



ராஜீவ்ரஞ்சன்

காணொலி காட்சி மூலம் நடைபெற்ற தங்கமயில் விருது வழங்கும் விழாவில் காகித நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜீவ் ரஞ்சன் கலந்து கொண்டு காகித நிறுவனம் செயல்படுத்தி வரும் நலப்பணி திட்டங்கள் பற்றியும், கொரோனா தடுப்பு பணிகளின் பங்களிப்பு பற்றியும் உரையாற்றி விருதினை பெற்றுக் கொண்டார்.

# Financial Express 24th June 2021

## 'Golden Peacock Award for Corporate Social Responsibility' to TNPL



TNPL has been declared the winner of the "Golden Peacock Award for Corporate Social Responsibility" for the year 2020. Dr Rajeev Ranjan, IAS, Chairman and Managing Director, TNPL received the Award in the 15th ICCSR Corporate Social Responsibility - 2021 Virtual event held on June 10, 2021. Every year, the Institute of Directors, New Delhi recognize the best global and national level organisations which have significantly embedded integrity, transparency and ethics into their business culture and DNA in the fields such as Oil production, Engineering, Renewable energy, Paper, Cement and mining.

TNPL has been implementing a comprehensive CSR Policy by undertaking many projects for the downtrodden public and underprivileged students in the surroundings of our Plants located in the backward areas. All the CSR activities are intended to empower the community to have a healthy and better livelihood. The company is also establishing a new school with a capacity of 1000 students at its Unit in Trichy District of Tamil Nadu.

The Company is working with over 40,000 farmers covering over 1,20,000 acres for the development of plantations which helps to nurture the ecology and environment. The GOLDEN PEACOCK award will motivate TNPL to further intensify its efforts to its objectives of CSR and achieve greater heights in the years to come.



# TNPL wins Golden Peacock Award for CSR for 2020

TNPL has been declared as the winner of 'Golden Peacock Award for Corporate Social Responsibility' for 2020. TNPL CMD Dr Rajeev Ranjan IAS received the Award in the 15th ICCSR Corporate Social Responsibility - 2021 Virtual event held on June 10, 2021

மக்கள் குரல் – 14.06.2021

# தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்துக்கு தங்கமயில் விருது

## தலைவர், மேலாண்மை இயக்குநர் ராஜீவ் ரஞ்சன் பெற்றுக் கொண்டார்

கரூர், ஜூன் 14–

சமுதாய பொறுப்புணர்வு செயல்பாட்டுக்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்துக்கு (டிஎன்பிஎல்) தங்க மயில் விருது வழங்கப்பட்டுள்ளது. காணொலி காட்சி மூலம் நடந்த விழாவில் விருதினை இதன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜீவ் ரஞ்சன் பெற்றுக் கொண்டார்.

புதுடெல்லி இன்ஸ்டியூட் ஆப் டைரக்டர்ஸ் என்ற அமைப்பானது ஒவ்வொரு ஆண்டும் பொறியியல், புதுப்பிக்கக்கூடிய சக்தி உற்பத்தி, வங்கித்துறை, சிமெண்ட், காகித உற்பத்தி உள்ளிட்ட நிறுவனங்களில் சமுதாய பொறுப்புணர்வு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் நிறுவனத்தை உலக அளவிலும், தேசிய அளவிலும் தேர்வு செய்து தங்கமயில் விருதை வழங்கி வருகிறது.

அதன்படி, கரூர் புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், அதைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சார்ந்த நலிவுற்ற சமுதாய குழந்தைகளுக்கு இலவசக் கல்வி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில பேச்சுப்பயிற்சி, இலவச மருத்துவ முகாம்கள், கண் மருத்துவ முகாம்கள் நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு நலப்பணித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதையடுத்து, 2020ம் ஆண்டுக்கான சமுதாய பொறுப்புணர்வு செயல் பாட்டுக்காக வழங்கப்படும் தங்கமயில் விருதுக்கு 319 நிறுவனங்கள் போட்டியிட்டதில், சிறந்த செயல்பாட்டுக்காக தேசிய அளவில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தேர்வு செய்யப்பட்டது.



காணொலி காட்சி மூலம் கடந்த ஜூன் 10ந்தேதி நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜீவ் ரஞ்சன் பங்கேற்று காகித நிறுவனம் செயல்படுத்தி வரும் நலப்பணித்திட்டங்கள் பற்றியும், கொரோனா தடுப்பு பணிகளின் பங்களிப்பு பற்றியும் உரையாற்றி விருதைப் பெற்றுக் கொண்டார்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் ஆலைகளை சுற்றியுள்ள அடித்தட்டு மக்களுக்கும் நலிந்த மாணவர்களுக்கும் பல சமூக நலப்பணிகளை, தனது விரிவான நலத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தி வருவது அதன் கொள்கையாகும். திருச்சி மாவட்டத்தில் தனது ஆலைக்குட்பட்ட இடத்தில் சுமார் 1000 மாணவர்கள் சேர்ந்து பயிலக் கூடிய புதிய பள்ளி கூடத்தை நிறுவி வருகிறது. சுமார் 40,000 மேற்பட்ட விவசாயிகளுடன் ஒன்றிணைந்து, 1 லட்சத்து 20 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான தோட்டங்களை மேம்படுத்தும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் பணி, சுற்றுச்சூழலையும் இயற்கையையும் பாதுகாக்க கூடியதாக உள்ளது.

கரூரில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்துக்கு சொந்தமான சமூக கூடத்தில் 200 படுக்கைகள் கொண்ட ஆக்சிஜன் வசதியுள்ள கொரோனா சிகிச்சை மையத்தை கடந்த மே 31ந் தேதியன்று முதலமைச்சர் திறந்து வைத்து சிறப்பித்தார். இந்த மையத்திற்கு இந்நிறுவனம் தடையில்லா ஆக்சிஜன், மின்சாரம் மற்றும் குடிநீரை வழங்கி வருகிறது. அருகில் உள்ள மாவட்டங்களுக்கு சிலிண்டர்களில் ஆக்சிஜனை அடைத்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தற்போது வழங்கப்பட்டுள்ள தங்கமயில்விருது அதன் சமூக நலப்பணிகளை பொறுப்புடன் வரும் ஆண்டுகளில் சிறப்பாக செயல்படுத்துவதற்கு ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது.

இந்து தமிழ் திசை

## தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்துக்கு

# சமூக பொறுப்புணர்வுக்கான தங்க மயில் விருது

■ சென்னை

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 2020-ம் ஆண்டின் கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வுக்கான 'தங்க மயில்' (கோல்டன் பீக்காக்) விருதை வென்றுள்ளது. கடந்த ஜூன் 10-ம் தேதி ஐசிஎஸ்ஆர் கார்ப்பரேட் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த மெய்நிகர் நிகழ்வில் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இந்த விருதை பெற்றுக்கொண்டார்.

உலகளாவிய மற்றும் தேசிய அளவிலான எண்ணெய் உற்பத்தி, பொறியியல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, காகிதம், சிமெண்ட், சுரங்கம் போன்ற துறைகளில் தனது வணிக முறையிலும், நடவடிக்கையிலும் நாணயம், வெளிப்படைத் தன்மை, ஒழுக்கத்தை நெறியோடு பின்பற்றுகிற நிறுவனங்களுக்கு டெல்லியில் உள்ள இன்ஸ்டிடியூட் ஆஃப் டைரக்டர்ஸ் என்ற அமைப்பால் இந்த விருது ஆண்டு



▶▶ முனைவர் ராஜீவ் ரஞ்சன்

தோறும் வழங்கப்படுகிறது.

காகித நிறுவனத்தின் ஆலைகளை சுற்றியுள்ள அடித்தட்டு மக்கள், நலிந்த மாணவர்களுக்கு பல சமூகநலப் பணிகளை, தனது விரிவான நலத்திட்டம் மூலம் செயல்படுத்தி வருகிறது. திருச்சி மாவட்டத்தில் தனது ஆலைக்கு உட்பட்ட இடத்தில் புதிய பள்ளிக்கூடத்தை நிறுவி வருகிறது. 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுடன் ஒன்றிணைந்து, 1.20 லட்சம் ஏக்கருக்கும் அதிகமான தோட்டங்களை மேம்படுத்தி வருகிறது.

கரூரில் காகித நிறுவனத்துக்கு சொந்தமான சமூக கூடத்தில் 200 படுக்கைகள் கொண்ட ஆக்சிஜன் வசதியுள்ள கரோனா சிகிச்சை மையத்தை முதல்வர் ஸ்டாலின் கடந்த மே 31-ம் தேதி திறந்து வைத்தார். இந்த மையத்துக்கு, காகித நிறுவனம் தடையில்லா ஆக்சிஜன், மின்சாரம் மற்றும் குடிநீரை வழங்கி வருகிறது.

தற்போது, தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்துக்கு அளிக்கப்பட்டுள்ள கோல்டன் பீக்காக் விருது, வரும் ஆண்டுகளில் அதன் சமூகநலப் பணிகளை பொறுப்புடன் சிறப்பாக செயல்படுத்துவதற்கு ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது.

TRINITY MIRROR - 14.06.2021

# TNPL bags Golden Peacock Award

Chennai, June 14: "Golden Peacock Award for Corporate Social Responsibility" for the year 2020 has been conferred on Tamil Nadu Newsprint and Papers Limited, TNPL.

Chairman and Managing Director, TNPL Dr. Rajeev Ranjan received the Award at the 15th ICCSR Corporate Social Responsibility - 2021 Virtual event held recently.

Every year, Institute of Directors, New Delhi recognize the best global and national level organisations which have significantly embedded integrity, transparency and ethics into their business culture and DNA in the fields such as Oil production, Engineering, Renewable energy, Paper, Cement and mining.



**Dr. Rajeev Ranjan with Golden Peacock Award**

TNPL has been implementing a comprehensive CSR Policy by undertaking many projects for the downtrodden public and underprivileged students in the surroundings of Plants located in the backward areas.

Recently, TNPL has established a COVID CARE CENTRE in its Community Hall having 200 beds with oxygen facilities inaugurated by Chief Minister Stalin on May 31.

TNPL provides oxygen, electricity and potable water on 24 x 7 basis. TNPL is also establishing an Oxygen bottling facility for supply of Oxygen in cylinders to the nearby districts.

மாலை தமிழகம் – 15.06.2021

# சமுதாய பொறுப்புணர்வு செயல்பாடு டி.என்.பி.எல்., நிறுவனத்துக்கு 'தங்க மயில்' விருது!

**சென்னை, ஜூன் 14-**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், 2020ம் ஆண்டின் சமுதாய பொறுப்புணர்வு செயல்பாட்டுக்கான, 'கோல்டன் பீக்காக்' விருதை வென்றுள்ளது.

டில்லி இன்ஸ்டிடியூட் ஆப் டைரக்டர்ஸ் என்ற அமைப்பானது ஒவ்வொரு ஆண்டும் பொறியியல், புதுப்பிக்கக்கூடிய சக்தி உற்பத்தி, வங்கித்துறை, சிமெண்ட், காகித உற்பத்தி உள்ளிட்ட நிறுவனங்களில் சமுதாயபொறுப்புணர்வுதிட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் நிறுவனத்தை உலக அளவிலும், தேசிய அளவிலும் தேர்வு செய்து, 'தங்கமயில்' (கோல்டன் பீக்காக்) விருதை வழங்கி வருகிறது.



அதன்படி, கரூர்புகளூர்தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், அதைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சார்ந்த நலிவுற்ற சமுதாய குழந்தைகளுக்கு இலவசகல்வி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில பேச்சுப்பயிற்சி, இலவச மருத்துவ முகாம்கள், கண்மருத்துவ முகாம்கள் நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு நலப் பணித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும், திருச்சி மாவட்டத்தில் தனது ஆலைக்கு உட்பட்ட இடத்தில் 1,000 மாணவர்கள் சேர்ந்து பயிலக் கூடிய புதிய பள்ளி கூடத்தை நிறுவுகிறது. 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுடன் ஒன்றிணைந்து, 1.20 லட்சம் ஏக்கருக்கும் அதிகமான தோட்டங்களை மேம் படுத்தும் பணி, சுற்றுச்சூழலையும் உயிரின வாழ்வியலையும் பாதுகாக் கும் பணியிலும் ஈடுபட்டு வருகிறது. இதை அடுத்து, 2020ம் ஆண்டுக் கான சமுதாய பொறுப்புணர்வு செயல் பாட்டுக்காக வழங்கப்படும் தங்கமயில் விருதுக்கு, 319 நிறுவனங்கள் போட்டியிட்டதில், சிறந்த செயல்பாட்டுக்காக தேசிய அளவில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தேர்வு செய்யப்பட்டது. காணொளி மூலம், கடந்த ஜூன் 10ம் தேதி நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் ராஜீவ் ரஞ்சன்பங்கேற்று, காகித நிறுவனம் செயல்படுத்தி வரும் நலப்பணித்திட்டங்கள் பற்றியும், கொரோனா தடுப்பு பணிகளின் பங்களிப்பு குறித்தும் உரையாற்றி விருதை பெற்றுக் கொண்டார்.